O.S.220-2023

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், புதுக்கோட்டை

<u>அ.வ.எண்.220/2023</u>

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி **முருகன்** என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகன் | வயது | : | 55/2025 |
| தகப்பனார் பெயர் | : | சுப்பையா | தாலுகா | : | அறந்தாங்கி |
| கிராமம் | : | எண்.53, எழில் நகர், கெங்காதரபுரம் | தொழில் | : | லாரி ஓட்டுநர் |

நாள்-03.09.2025

பி.வா.சா.1

**சாட்சி இன்று திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) **வாதி** முத்துமாணிக்கம் என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் எட்டாவது வகுப்பு வரை படித்திருக்கிறேன். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான்.

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தை நான் படித்து பார்த்துவிட்டுத்தான் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

3) எனது எதிர்வழக்குரையிலும், எனது நிரூபண வாக்குமூலத்திலும் நான் பெற்ற கடனுக்காக வா.சா.ஆ.1-ஐ எழுதிக்கொடுத்ததாக பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்று சொல்வது சரியல்ல.

4) 2022-ஆம் ஆண்டில் வண்டி வாங்கி, விற்கும் தொழில் செய்வதற்காக பணம் எனக்கு தேவைப்பட்டது. அவ்வாறு எந்த வண்டி வாங்கினேன் என்றும், எந்த வண்டியை விற்றேன் என்றும் கேட்டால் டாடா ஏஸ் வண்டியை வாங்கி, விற்றேன். அவ்வாறு டாடா ஏஸ் வண்டியை பல ஊரில் உள்ள ஆட்களுக்கு விற்பனை செய்திருக்கிறேன். நான் அவ்வாறு கடன் பெற்ற தொகையில் டாடா ஏஸ் வண்டி வாங்கி பல நபர்களுக்கு விற்றேன் என்றும், யார் யாருக்கு விற்றேன் என்றும் எனது எதிர்வழக்குரையில் நான் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) அந்தக்காலத்தில் எனது குடும்ப செலவுக்காகவும் பணம் தேவைப்பட்டதாக எனது எதிர் வழக்குரையில் நான் கூறியுள்ள நிலையில் என்ன விசேஷ காரியங்களுக்காக

அவ்வாறு பணம் தேவைப்பட்டது என்று கேட்டால், எனது மகனின் படிப்பிற்காக தேவைப்பட்டது. நான் வாகனம் வாங்கி விற்பனை செய்ததை காட்டுவதற்கோ, எனது மகனின் படிப்பு செலவிற்கான ஆதாரத்தை காட்டுவதற்கோ ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான்.

6) உண்மையிலேயே நான் எனது சொத்தை விற்பனை செய்வதற்காகத்தான் வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த ஆவணத்தை நான் வாதிக்கு எழுதிக்கொடுத்தேன் என்றும், அதை மறைத்து வழக்கிற்காக நான் வாங்கிய கடனுக்காக அதை எழுதி கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

7) வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தத்தின்படி நான் வாதிக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுக்க கடமைப்பட்டிருக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

**மறு விசாரணை -இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநா் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.